

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 20.02.2025 | 08. ‘நமது சம்மதமின்றி’ அவராக நமக்குள் கிரியை செய்திட மாட்டார்! |
|---|---|



**நா**ம் கிறிஸ்துவைச் சொந்தமாக்கிப் பிழைக்கும் உயிருள்ள கிறிஸ்தவர்களாய் இருக்க வேண்டும்! அவர் நமக்குள்ளே இருந்தால், வெளியே நின்று அவர் தட்ட வேண்டியதில்லை! சர்வலோகங்களையும் தன் சொல்லால் உண்டாக்கிய சர்வ வல்லமையுள்ள ஆண்டவருக்கு ‘நமது சம்மதமின்றி’ நம்மை இரட்சிப்பதுகூட அவரால் முடியாது! மனமில்லாதவர்களை அவர் கட்டாயமாய் இரட்சிக்கிறதாயிருந்தால், உலகத்தார் யாவரையும் ஒரே நிமிஷத்தில் மகிமையில் சேர்த்திருப்பார்! அப்படி அவர் செய்யக்கூடுமென்றால், ‘‘உன்னைச் சேர்த்துக்கொள்ள எத்தனை தரமோ நான் மனதாயிருந்தேன், உனக்கோ மனதில்லாமற் போயிற்று என்றும்; உங்களுக்கு மனதில்லையே.....!’’ என்றும் இயேசு யோவான் சுவிசேஷத்தில் கண்ணீர்விட்டுப் புலம்ப வேண்டியதென்ன? நம்மை தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளவே வாஞ்சையோடிருக்கிறார்!

பல சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, நம்மை அவருக்கு சொந்தமாக்கிக் கொள்ள முயற்சிக்கிறார்! இவ்வாறு கிறிஸ்து நமக்குள் வாழ்ந்து, அவர் நமக்குள் வசிக்க இடம் பெற்றால், நாமும் ஆசீர்வதிக்கப்பட்டு, அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருந்திருப்போமல்லவா?

– ரத்னம்